**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**S.T.C. No. 21/2021 PW .6**

பெயர் : தமிழரசன் தந்தை/கணவர் பெயர்: பழனியாண்டி

ஊர் : அய்யாபட்டி தாலுகா :

வயது : தொழில் : 1743

தலைமைக்காவலர்

ஜாதி : சமயம் : இந்து

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.08.2026

**(எதிரி ஆஜர்.)**

<u>**05.08.2026முதல் விசாரணை**</u>:

நான் தற்போது சிங்கம்புணரி காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.05.2020 -ம் தேதி எஸ்.எஸ்கோட்டை காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக நான் பணியிலிருந்த போது 19.00 மணிக்கு நிலையத்தில் ஆஜராகி அய்யாக்கன்னு மகன் பெர்னாட்சா என்பவர் கொடுத்த புகாரினை பெற்று நிலைய மனு எண்.59/2020 -ன் படி மனு ரசீது வழங்கினேன். மனுவை விசாரணைக்காக சார்பு ஆய்வாளர் அவரது பார்வைக்கு வைத்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**</u>

புகார் மனு பெற்றபோது என்னை தவிர வேறு யாரும் காவல் நிலையத்தில் இல்லை என்றால், சரிதான். புகார்தாரர் தனது மனுவில் தனக்கு கையில் காயம்

ஏற்பட்டதாக கூறியிருந்தார், நான் அதற்கு மெடிக்கல் மெமோ கொடுக்கவில்லை. சார்பு ஆய்வாளர் விசாரணையில் மேற்படி மனுவினை எத்தனை மணிக்கு எந்த தேதியில் சார்பு ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன் என்று சொல்லியுள்ளேனா என்றால், சொல்லவில்லை. சார்பு ஆய்வாளர் மேற்படி புகார் மனுவின் மீது என்ன



நடவடிக்கை எந்த தேதியில் எடுத்தார் என்று எனக்கு தெரியாது. அ.சா.1சொன்ன நாள், நேரத்தில் புகார் கொடுக்கவில்லை என்றாலும், நான்கு நாட்கள் கழித்து கொடுத்த புகாரினை பெற்று முன் தேதியிட்டு சார்பு ஆய்வாளர் வேண்டுகோளுக்கிணங்க மனு ரசீது கொடுத்துள்ளேன் என்றால், சரியல்ல.